RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt2224s-22265

OPEN ACCESS

# ஆழ்வார்களின் பக்தியும் வழிபாட்டுத் தத்துவங்களும்

**இரா. பத்மா** [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, தேசியக்கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620001, தமிழ்நாடு, இந்தியா

# Devotion and Philosophies of Worship of the Azhwars

**R. Padma** [a, *]

[a] Department of Tamil, National College (Autonomous), Tiruchirappalli-620001, Tamil Nadu, India

* Corresponding Author:
padma.sampath42@gmail.com

Received: 22.09.2022
Revised: 11-11-2022
Accepted: 13-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

In the 16th century, the perennial river of the Vaishnava bhakti movement, which was created by the Azhwars, began to flow northward. The age of the Azhwars was the age of devotion. The passionate devotional songs of the Azhwars became a wonderful force to melt the heart. Vaishnava devotion of the Azhwars has the power to melt the hard heart that is like a stone to snow. Thus, Vaishnava literature emerged. In Vaishnava bhakti literature, prabandham had an impact on the works of the Azhwars. The glory of the devotion practiced by the Azhwars in prabandham is the glory of the names of God. Devotion and Pride are the special philosophies they have discovered in their works, such as the various divine pastimes of Sri Krishna, his wonderful beauty, vatsalya, Madhu Priya, dasya, and companion bhakti expressions, the glorification of Rama and Krishna as the one Supreme Being, the devotion of the Gopis, the expression, and the pastimes of Krishna, and the Madurya devotion of the Azhwars. Prabandham and the Bhagavatam are the driving forces of Krishna bhakti and Vaishnava bhakti literature. The collection of twelve Azhwars is named "Nalayira Divya Prabandham". The Azhwars have said in their works that God can be attained through pure devotion.

**Keywords:** Azhwars, God, Vaishnava Devotion, Bhakti Movement

## முன்னுரை

இறைவனை இனிமையான பாடல்களால் பண்ணுடன் பாடி அவன்மீது, பிரதிபலன் கருதாத தூய பக்தி செலுத்தி அவனை எளிதில் அடையலாம் என்ற ஆழ்வார்களின் கொள்கை. அவர்கள் வாழ்ந்த காலத்தில் மக்களின் மனதைக் கவர்ந்தது. வேள்வி, விரதம், தவம், யாகம், யஞ்ஞம் முதலியன தேவை இல்லை என்றும் இறைவனை அடைய பக்தி தான் எளிய உபயம் என்றும், இறைவன் மீது செலுத்தும் பக்தி நிச்சயமாக பலன் அளிக்கக் கூடியது என்றும் ஆழ்வார்கள் தங்களது பக்திப் பாசுரங்கள் மூலம் மக்களிடையே பிரச்சாரம் செய்தனர். பக்தி செய்வதன் மூலம் கிடைக்கும் இன்பம் சுவர்க்கத்தில் கிடைக்கும் இன்பத்தைக் காட்டிலும் மேலானது என்று அவர்கள் கூறினர். இறைவனின் ஒப்பற்ற குணங்களைப் பற்றியும், அவனது வாத்சல்யம், கருணை, சௌலப்யம் முதலிய குணாதிசயங்களைப் பற்றியும் அவர்கள் பாடியுள்ளனர். பக்தி கொள்கைகள் இரண்டு அவற்றின் பொதுத்தத்துவங்கள், பக்தியின் மகிமை, இறை நாமத்தின் மகிமை, உருவ அருவ வழிபாடு, இறைவனைப் போற்றிப்பாடுதல், சரணாகதி, குருமகிமை, சத்சங்கம், வைராக்கியம், நவதாபக்தி (ஒன்பது வகை பக்தி) ஆகும். பக்தி முக்திப் பற்றி இக்கட்டுரையில் அறியலாம்.

## பக்தியும் வழிபாடும்

ஆழ்வார்களின் பக்தி கொள்கைகளைப் பொதுத்தத்துவங்கள், சிறப்புத் தத்துவங்கள் என்று இரண்டு வகையாகப் பிரிக்கலாம். பொதுத்தத்துவங்கள் - 7. அவை: பக்தியின் மகிமை, இறைவனின் உருவ அருவவழிபாடு, கீர்த்தனைப் பாடல்கள், சரணாகதி, குருமகிமை, சத்சங்கம், வைராக்கியம். சிறப்புத் தத்துவங்கள் 5. அவை: கண்ணபிரானின் பல்வேறு லீலைகளைப் பாடுதல், கண்ணபிரானின் தெய்வீக அழகைப் புகழ்ந்துப் பாடுதல், கண்ணபிரானின் பரத்துவத்தை உணர்த்துதல், கோபியர்கள் கண்ணன்மீது வைத்திருந்த அன்பைப் போற்றிப்பாடுதல், இராமனையும், கிருஷ்ணரையும் ஒரே பரம்பொருளாகப் போற்றுதல்.

## பக்தியின் மகிமை

அனைத்து ஆழ்வார்களும் மோட்சத்தையடைய பக்தியே சிறந்த உபாயம் என்றும், யோகம், தவம் இவற்றை விடுத்து பிராட்டியைத் தன் மார்பில் வைத்திருக்கும் பெருமானைச் சிந்தனையுள் வைத்து தியானம் செய்தால் எளிதில் முக்தி கிட்டும்,

“பச்சைமா மலைபோல் மேனிப் பவள வாய்க் கமல செங்கண்

அச்சுதா! அமரறே! ஆயர்தம் கொழுந்தே என்னும்

இச்சுவை தவியான்போய் இந்திரலோகமாளும்

அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே!”

திருவரங்கத்தில் வாசம் செய்பவனே, பச்சை மாமலை போன்ற திருமேனியையும், பவளவாயையும், தாமரை போன்ற அழகிய கண்களையும் உடைய அச்சுதா! அமரரேறே! ஆயர்தம் கொழுந்தே உன் திருநாமங்களைச் சொல்லும் இச்சுவையைவிட்டு நான் இந்திரலோகமாளும் அச்சுவை பெறுவதாயினும் அதை விரும்பமாட்டேன் என்று தொண்டரடிப்பொடியாழ்வார் கூறுகிறார்.

## இறைநாமத்தின் மகிமை

திருமங்கையாழ்வார் தம்முடைய ஒரு பாசுரத்தில் ‘நாராயணா’ என்னும் நாமத்தின் மகிமையைப் பற்றிப் பாடுகிறார்.

“குலம் தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயராயினவெல்லாம்

ஆயின் செய்யும்” (Annangaracharian, 1969)

அப்பாடலில் நாராயணா நாமம் உயர்ந்த குலம், செல்வம், மோட்சம், ஆற்றல், பெற்ற தாயைவிட நன்மைகளையும் செய்யும். துயரங்கள் பொடியாகிவிடும் என்கிறார்.

## உருவஅருவ வழிபாடு

விஷ்ணுவின் சகஸ்திர நாமங்களில் ஏதாவது ஒரு பெயரை எப்பொழுதும் உச்சரித்துக் கொண்டு இருப்பதாலும், நாக்கினால் கீர்த்தனைகளையும், செவிகளால் அவனது பெருமைகளையும் கேட்டுக்கொண்டு இருப்பதால் கர்மங்களினால் வரும் பாவங்கள் அனைத்தும் நீங்கிவிடும். ஆழ்வார்கள் இறைவனை உருவமாகவும், அருவமாகவும் கருதிய போதிலும் உருவ வழிபாட்டிற்கே அவர்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள். அடியார்களுக்கு எவ்வுருவம் உயர்ந்ததோ, அவ்வுருவத்தை தன் உருவமாக ஆழியான் ஏற்றுக்கொள்வான் என்று பொய்கையாழ்வார் கூறுகிறார்.

“தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவம் தானே

தமருகந்த தெப்பேர் மற்றபேர் - தமருகந்து எவ்வண்ணம்

சிந்தித்தமையார் திருப்பரே அவ்வண்ணமே ஆழியான் ஆம்”

இறைவனை எவ்வாறு சிந்தித்திருப்பார்களோ அவ்வண்ணமே எம்பெருமான் ஆவான் என்கிறார் பொய்கையாழ்வார் (Annangarachariar, 1960).

## இறைவனைப் போற்றிப் பாடுதல்

இறைவனின் குணங்களையும் லீலைகளையும் உரைப்பது தவம் செய்வதற்கு சமமாகும் என்று பூதத்தாழ்வார் கூறுகிறார்.

“வாய்கொண்டு மானிடம் பாட வந்த கவியேன் கல்லேன்

ஆய்கொண்ட சீர்வள்ளல் ஆழிப்பிரான் எனக்கே உளன்”

வாயால் மானிடர்களைப் பாடவந்த புலவன் நான் அல்ல அதற்கு வள்ளலாகிய ஆழிப்பிரான் எனக்கே இருக்கிறான் என்று பொய்கையாழ்வார் கூறியிருக்கிறார். இறைவனைத் தவிர பிறரை வாழ்த்தாது என்று பொய்கையாழ்வார் (Annangarachariar, 1960).

## சரணாகதி

ஆழ்வார்கள் தம் குற்றங்களைக் கூறி இறைவனிடம் தம்மை ஆட்கொள்ளும்படி வேண்டுகிறார்கள். திருமங்கையாழ்வார். தாம் செய்த பாவச்செயல்களைக் கூறி தமக்கு அடைக்கலம் நல்கும்படி இறைவனிடம் பின்வருமாறு வேண்டுகிறார்.

“பற்றே ஒன்றுமிலேன் பாவமே செய்து பாவியானேன்

அடியேனை ஆட்கொண்டருளுக” (Annangarachariar, 1960).

## குருமகிமை, சத்சங்கம்

சீவன் தானாக இறைவனின் அருகில் செல்ல முடியாது. சத்குருவின் துணைக் கொண்டு தான் ஸ்ரீமந்நாராயணனின் திருவடிகளை அடைய முடியும். எனவே ஸ்ரீசம்பிரதாயத்தில் குருவுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. முக்தி அடைய வேண்டும் என்ற எண்ணம் மனதில் தோன்றி வளர்ச்சியடைய சத்சங்கம் மிகவும் இன்றியமையாதது. மனம் பற்றற்று இருக்க பகவானுடைய அனுகிரகம் மட்டுமெ சத்சங்கம் கிட்டும் என்று நாரத பக்தி சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

## கண்ணனின் பிறப்பு

மதுராவில் வாசுதேவனின் மனைவியான தேவகியின் வயிற்றில் பாற்கடல் வாசியான விஷ்ணு பகவான் கண்ணன் வடிவத்தில் அவதரித்தார். கோகுலத்தில் தெய்வநங்கை யசோதைக்குப் பேதைக் குழவியாய், பலதேவருக்குத் தம்பியாய், ஆயர்குல நாயகனாய், ஆயர்பாடிக்கு அணிவிளக்காய் கண்ணன் வளர்ந்தான். பெரியாழ்வார் தம்முடைய படைப்பான “திருமொழி” யின் கண்ணனின் குழவிச் செயல்களைப் பாதம் முதல் கேசம் வரை அங்கத்தின் அழகைப் பாடியிருக்கிறார். ஆழ்வார்கள் கண்ணனின் பாலலீலைகளை விரிவாகவும், நுணுக்கமாகவும் வருணனைச் செய்தளவிற்கு மதுரா லீலைகளையும், துவாரகை லீலைகளையும் செய்யவில்லை.

கண்ணனின் தெய்வ அழகு, வீரச்செயல்களையும் சொல்லி பெரியாழ்வார் தாலாட்டுகிறார். கண்ணனின் பத்துக் குழவிப் பருவங்களையும் வருணனை செய்துள்ளார். யசோதையிடம் கண்ணன் செய்யும் குறும்புகளையும் கம்சனால் அனுப்பப்பட்ட அரக்கர்களை வதம் செய்தல், முதலியவற்றையும் பசுக்களை மேய்த்தல், இளமைப்பருவ லீலைகளையும், கண்ணனின் கால்விரல்கள் முதல் கூந்தல் வரையும் பெரியதிருமொழியால் விளக்குகிறார்.

“சக்கரக் கையன் தடங்கணண்ணால் மலர விழித்து

ஒக்கலைமேல் இருந்து உன்னையே - சுட்டிக் காட்டுங்காண்

தக்கதறியேல் சந்திரா! சலம் செய்யாதே

மக்கள் பெறாத மலடன் அல்லையேல், வா கண்டாய்” (Annangarachariar, 1969)

நிலாவை அழைத்துக் கண்ணனுடன் விளையாட வரும்படியும், வராதிருந்தால் சக்கரத்தை விடுத்துத் தண்பான் என்று குறிப்பிடுகிறார். கண்ணனின் குழந்தை பருவ அழகு என்பது பாத விரல்களுக்கு நவரத்தினங்களின் வருணத்தையும், ஒரு விரலுக்கு மட்டும் தங்க நிறத்தையும் பூசினாள். இந்த அற்புத அழகைக் காண ஆயர்பாடியிலுள்ள பெண்களை யசோதை நிலையிலிருந்து அழைக்கிறார்.

“செங்கமலப்பூவில் தேன் உண்ணும் வண்டேபோல்” (Annangarachariar, 1969)

அழகிய கைகளாலே ஓடிவந்து என்னை அணைத்துக்கொள் என்றும் கண்ணனின் தளிர்நடை அழகையும், “தொடர் சங்கிலிகை சலார் பிலாரென்னத் தூங்கு பொன்மணி ஒலிப்ப” என்று பெரியாழ்வார் தாய் நிலையிலிருந்து கூறுகிறார் (Annangarachariar, 1969).

## கிருஷ்ணரின் இளமையழகு

ஆயர்பாடிப் பெண்கள் மூலமாக கிருஷ்ணனுடைய இயற்கை அழகை “குன்று எடுத்து முலையுமென் வசமல்லவே” (பெ.திருமொழி - 2) கோவர்த்தன மலையை குடையாய் பிடித்துப் பசுக்கூட்டங்களையும், கோகுலவாசிகளையும், அரக்கனை வதம் செய்தலையும், காளிய நாகத்தின் மீது நடனம் செய்தல் கண்ணனின் சிருங்கார லீலைகள் மாதுர்ய பக்தியில் அறியலாம்.

சிங்கக்குட்டி போன்ற எங்கண்ணனைச் சிறியவன் என்று இகழாதே இவனைப் பற்றி மகாபலி சக்கரவர்த்தியிடம் கேள். இவனைச் சிறியவன் என்று நினைப்பது தவறு என்று கருதுவாயானால், இவனுக்கு நீ அடிமையாக இருக்க தகுதியுள்ளவனாகிறாய். எம்பெருமான் தான் இவன். அப்பேர்ப்பட்ட பரம்பொருளால் அழைக்கப்பட்டோமே என்று மகிழ்ந்து ஓடிவா கிருண்னின் இறைத்தன்மையை நிரூபிக்கும் பாசுரம்,

“சியினென் றென்னிளஞ் சிங்கத்தை இகழேல் கண்டாய்

நிறைமதீ நெடுமால் விரைந்துன்னைக் கூவுகின்றான்” (Annangarachariar, 1969)

## இராமனையும் கிருஷ்ணரையும் ஒரே பரம்பொருளாகக் கருதுதல்

பெரியாழ்வார் திருமொழியில் ஒன்பதாம் திருமொழியிலுள்ள பத்துப் பாசுரங்களும், பத்தாம் திருமொழியிலுள்ள பத்துப் பாசுரங்களும் இராமாவதாரப் பெருமைகளைப் பேசுகின்றன. கிருஷ்ணாவதாரப் பெருமைகளைச் சொல்லும் கோகுலத்தின் சிங்கமே, சீதை மணவாளனே, சிறுகுட்ட செங்கண்மாலே” என்று பெரியாழ்வார் அழைக்கின்றார். கிருஷ்ணர் மற்றும் கோபியர்களுக்கிடையே அன்புறவு, பக்தி இலக்கியத்தின் முதுகெலும்பாகக் கருதப்படுகிறது. கோபிகைகள் கிருஷ்ணன் மீது வைத்திருந்த தெய்வீகக் காதல் கிருஷ்ணபக்தி கோபிகைகளின் அன்பு பக்தியின் உன்தை வடிவமாகப் பாவத்திற்கு பிரபந்தத்தில் முக்கிய இடம் கொடுக்கப்பட்டு நாரத பக்தி சூத்திரத்திலும் சாண்டில்ய பக்தி சூத்திர்ததிலும் கருதப்பட்டுள்ளது.

## முடிவுரை

இல்லற வாழ்க்கையை மேற்கொண்டு உலக இன்பங்களை நுகர்ந்தவாறே தூய பக்தி மூலம் இறைவனை அடைய முடியும் என்று ஆழ்வார்கள் பாசுரத்தில் கூறியுள்ளார்கள். பக்தியின் மகிமை இறைநாமங்களின் மகிமை, கீர்த்தனைப் பாடல்கள் மூலம் இறைவனைத் துதி செய்தல், பிரபக்தி,

குருமகிமை, சத்சங்கம், வைராக்கியம் மூலம் பக்தியின் பொதுத்தத்துவங்கள் பற்றிய பாசுரங்களும் இராமனையும், கிருஷ்ணனையும் ஒரே பரம்பொருளாகப் போற்றுதல் முதலிய பக்தியின் சிறப்பு தத்துவங்கள் பற்றிய பாடல்களும் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்திலும் மிகுதியாக காணப்படுகிறது. ஆழ்வார்கள் குலம், கோத்திரம், சாதி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இறைவன்மீது பக்தி செலுத்துபவர்கள் தாழ்ந்த குடியினராயினும் உயர்ந்த குலத்தவர்களாகக் கருதினார்கள் அனைத்து வகை பக்திக்கும் ஆழ்வார்கள் முன்னோடியாக திகழ்கின்றனர். ஆழ்வார்கள் இல்லற வாழ்க்கை மேற்கொண்டு இன்பங்களை நுகர்தலே தூய பக்தி மூலம் இறைவனை அடைய முடியும் என்று கூறுகிறார்கள். பக்தியின் மகிமை, இறைநாமங்களின் மகிமை, கீர்த்தனைகள், பிரபக்தி, குருமகிமை, சத்சங்கம், வைராக்கியம் பற்றிய பாசுரங்களையும், கிருஷ்ணனின் பால பருவம், பருவ லீலைகள் கேசம் முதல் பாதம் வரை அழகை வருணித்தல், இராமனையும் கண்ணனையும் ஒரே பரம்பொருளாகப் போற்றுதல் முதலிய சிறப்புத் தத்துவங்களைப் பற்றி நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் மிகுதியாகக் காணக் கிடைக்கின்றன. நவதாபக்தி முதல் ஆறுவகை பக்திகள், வைதீக அல்லது மரியாதை பக்தியின் அங்கங்களையும், தாஸ்யம், சகியம் மற்றும் ஆத்மளிவேதனம் ஆகிய நவதாபக்தியின் இறுதி மூன்று வகை பக்திகள் இராகாத்மிகா பக்தியின் அங்கங்களாகவும் கருதப்படுகின்றன. ஆழ்வார்கள் எம்பெருமானுக்கு அடிமை, தோழமை, தாய் அன்பு, தாம்பத்யம் ஆகிய பாவங்களினாலும் “வழிபாடு” செய்திருக்கிறார்கள். ஆண்டாள், நம்மாழ்வார், குலசேகராழ்வார் மற்றும் திருமங்கையாழ்வார் மாதுர்ய பக்திப் பாடல்களை அதிகமாகப் பாடியுள்ளார்கள். இவை தவிர சாந்தபக்தி அனந்யாஜ்ரய பக்தி பற்றிய பாடல்களும் ஆழ்வார்களின் படைப்புகளில் காணப்படுகிறது. ஆழ்வார்கள் குலம், கோத்திரம், சாதி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இறைவன் மீது தூய பக்தி செலுத்தும் அடியார்களைத் தாழ்ந்த குலத்தவராயினும் உயர்ந்த குலத்தவர்களாகக் கருதினார்கள். அனைத்து வகை பக்திகளுக்கும் ஆழ்வார்கள் முன்னோடியாகத் திகழ்கின்றனர்.

## References

Annangarachariar, (1960) Naalayira Divya Prabandham, Kirinthamala Press, Kanjipuram, India

Annangarachariar, (1969) Periyalvar Tirumoli, Kanchipuram, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License